தொகுதி- டுஅ :: பகுதி-க — Vol. 58 :: No. 1

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1993
சுபகிருது—சித்திரை
APRIL—1962

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 23—6—62)

உள்ளுரை

1 செயற்கைக் கடல் 1
(திருமதி சசிகலா திரிவேதி)
2 துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் 4
வித்துவான் ஆ. சிவலிங்கனார் அவர்கள்
விரிவுரையாளர், தமிழ்க் கல்லூரி, மயிலம்
3 ஆனுங்கூர் அகத்தீச்சுரக் கல்வெட்டுக்கல்
புலவர் ச. கணபதி ராமன் P.O.L.
எம்.ஓ.எல். ஆராய்ச்சி மாணவன் 20
4 செந்தமிழ் ஐம்பத்தேழாந் தொகுதி உள்ளுறை 25
5 மதிப்புரை 29
6 டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் 31
தமிழ்ச் சங்கத்திற்கு அளித்த நூல்கள்

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph D. சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை
செந்தமிழ்

தொகுதி. ருஅ Vol. 58	திருவள்ளுவர் ஆண்டு 1993 சுபகிருது —சித்திரை 1962—April	பகுதி. க No. 1

செயற்கைக் கடல்

[திருமதி. சசிகலாதிரிவேதி]

நீச்சல் குளங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் செயற்கைக் கடலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நீராடி மகிழ்வதற்கான இந்தச் செயற்கைக் கடல் இன்று மேற்கு ஜெர்மனியில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ஒரு முக்கிய அம்சமாகி வருகிறது.

ஜெர்மனியில் குளிர் காலத்தில் ஓய்வுக்காகக் கடலோரத்து ஊர் ஒன்றில் போய்த் தங்குகிறவர்களை யாரும் பைத்தியக்காரர்கள் என்றுதான் சொல்லுவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்வரையில்கூட இந்த மாதிரி எண்ணம் நீடித்து வந்தது. குளிர் காலத்தில் ஓய்வு நாட்களைக் கழிக்க விரும்புவோர் எவரும் நிறைய உறைபனியுள்ள மலைப் பகுதிகளுக்குத்தான் செல்லுவது வழக்கம். ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது. கடலோரத்து ஊர்களுக்குத்தான் குளிர் காலத்தில் மதிப்பு மிகுதி என்னும் நிலைமை இப்போது ஏற்பட்டுவிட்டது.

வெப்பதட்ப நிலை மனித உடலை எவ்வாறு பாதிக்கின்றது என்பதைக் கீல் பல்கலைக்கழகத்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

"நகர்ப்புற மக்கள் தமது ஓய்வு நாட்களில் சூரிய வெளிச்சத்தின் உதவிகொண்டுதான் செயல் திறன்பெறவேண்டுமென்பதில்லை. அயோடின் கலந்த காற்றும், கடலோரச் சூழ்நிலையும், தூய காற்றும், கட்டாய தேகப்பயிற்சியும், உயர் சக்தியுள்ள அல்ட்ரா வயலட்கதிரியக்கமும் சேர்ந்தால் தான் உடலில் ஒரு செயல்வேகம் ஏற்படும்" என்று அவர்கள் கூறுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, மத்தியதரைக் கடலோரப் பட்டணங்களைவிட வடக்கு ஜெர்மன் கடலோரப் பட்டணங்கள்தான் சிறந்தவை என்றாகிறது என வைத்தியர்கள் வற்புறுத்துகின்றனர். உடல் நலத்திற்குக் குளித்தல் மிகவும் அவசியமில்லை என்றாலும், குளிர் காலத்தில் மக்கள் குளிக்காமலிருக்கக் கூடாது என டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆனால் குளிர் காலத்தில் கடல் நீர் மிகவும் குளிர்ச்சியாயிருக்குமே! என்ன செய்வது? இதைக் கருதி, கட்டிடத்துக்குள்ளேயே நீச்சல் குளம் அமைத்திருக்கிறார்கள் வெஸ்டெர்லண்ட் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய நீச்சல்குளம் உண்மையாகவே கடற்கரைச் சூழ்நிலையுடன் உருவாகிவருகிறது. கடல் சீதோஷ்ணம் தரும் கருவி ஒன்று அங்கே இருக்கிறது; அலை உண்டாக்கும் யந்திரம் ஒன்றும் இருக்கிறது. இவையெல்லாம் குளிர் காலத்திலும் மக்களைக் குளிக்கத் தூண்டும், குளமிருக்கும் மண்டபத்துக்குள் ஒரு கருவி கடல் நீரைத் தூவானமாக அள்ளிக் கொட்டிக்கொண்டிருக்கும். இதனால் சரியான கடல் சூழ்நிலை அங்கே ஏற்பட்டுவிடுகிறது உல்லாசப் பிரயாண காலத்தை நெடியதாக்கும் முயற்சிகள் 1952-ஆம் ஆண்டில் துவங்கின. அது முதல் புதுவகையான ஓய்வுத் தலங்கள் பல உருவாக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மக்கள் வெப்பமான கடல் நீரில் குளிக்க முடியும்; கடற் காற்றை சுவாசிக்க முடியும்; இயற்கை வைத்தியம் செய்துகொள்ள முடியும். கபக்கட்டு, காச நோய்,

பொதுஅயர்வு, தோல் வியாதி, கரப்பான் முதலியவற்றைத் தீர்க்கக்கூடிய அபூர்வமான சூழ்நிலை இது. உடல்நலமுள்ள மக்கள்கூட அங்கே சென்று தங்குகிறுர்கள். வடகடலின் கரையில் தங்குவதைக் காட்டிலும் ஆரோக்கியமான முறை வேறில்லை என்ருகிவிட்டது.

முதலாவது உலகப் போருக்கு முன்பெல்லாம் இந்த வட கடலோரப் பட்டணங்களில் ஓய்வுக்காலம் 60 அல்லது 70 நாட்கள்தான் நீடிப்பது வழக்கம். ஆனுல் இப்போதோ ஆண்டுக்கு 120 நாட்கள்வரைகூட இது நீடிக்கிறது. குழந்தைகளுக்கான விடுதிகளும், நோய்க்குப் பிந்திய ஓய்வு விடுதிகளும் ஆண்டில் 12 மாதமும் திறந்திருக்கின்றன. வட கடல் தீவான ஹெலிகோலன்ட் என்பது சென்ற கிறித்துமத்திலும், புத்தாண்டு தினத்திலும் உல்லாசப் பிரயாணிகள் நிறைந்திருந்தது. ஐரோப்பாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கே வந்துகூடுகிறுர்கள். 23 டிக்ரி வெப்பத்தில் வைக்கப்பட்டிருக்கும் நீச்சல் குளம் ஒரு மிகக் கவர்ச்சிகரமான அம்சம். கடலில் குளிக்கும் இன்பம் இதில் குளிக்கும்போது ஏற்படுகிறது என்ருல், மக்கள் அங்கே வந்து கூடுவதில் வியப்பென்ன?

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

வித்துவான் ஆ. சிவலிங்கனுர் அவர்கள்,
விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

அக்காலத்திலே அண்ணுமலை ரெட்டியார் என்பவர், சுவாமிகளைத் "தேவரீர் விவாகம் செய்துகொள்ள வேண்டும்" என்று பிரார்த்திக்கச் சுவாமிகள்,

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே

எனவும்,

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமிலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்கும் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டும் கவலை தானே

எனவும் விடையளித் தருளினுர். சுவாமிகள் கருத்துணர்ந்து பின்பு வேலையசுவாமிகளைப் பிரார்த்திக்க, அவர் சிவப்பிரகாசசுவாமிகளுடைய கட்டளை யெவ்வாருமோ என்னும் கருத்தால் உடன்படல், மறுத்தல் என்னும் இரண்டும் இன்றி மௌனராய் இருந்தனர். பின்னர் யாத்திரையினின்றும் வந்த கருணைப்பிரகாசசுவாமிகளிடத்தில் தமது வேண்டுகோளை விண்ணப்பம்செய்த மாத்திரத்தில் அவர் அதற்கு உத்தரமாக,

நாணி யென்பதை நாரியேன் றுரைத்திடு நசையால்
வேணு வானது விளைந்துபோய் புகுந்தது வென்றுற்
காண லாவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணு வார்மயல் காளையர் என்பதும் புதிதோ

என்னும் கலித்துறையைப் பாடித் தமது கருத்தை உள்ள படித் தெரிவித்தார்.

சிவப்பிரகாசசுவாமிகள் தம் பின்னோராகிய இருவர் கருத்தையும் உணர்ந்து அவர்களுக்குத் தாம் துறவறம் பூண்டமையைத் தெரிவித்து மணம் புரிவித்து அத்தருணத் திலே யாவரும் பேருவகையுறும்படி வினோதமாக,

ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை
யாரென்ன வுமைவினவவும்
அன்னதொரு மடமங்கை யன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண்புனலெனத்
துய்யவொளி யானனம் கரியவிழி காதுவாய்
தோயத்தி லுண்டோவெனச்
சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுதமென்னப்
பொய்யென நினைந்துநற் கொங்கையும் கூந்தலும்
புனலிடை யுண்டோவெனப்
புற்புதம் சைவலம தெனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காயெனத்
தையலவ ளேனென்ன நாணொடு வணங்கியென்
றன்பிழை பொறுத்திடென்றே
சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி யுமைக்காக்கவே

எனவும்,

அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதா
ஊனயவேன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனேன் சென்னியில்
விளங்குகண் எண்ணினன் என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
விகடமேன் செய்தாயென
மருவுமேன் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவன் நகைத்துநிற்க
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய்எனக்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பமாப் பெற்றகன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக்கவே

எனவும்,

அம்பிகை யரன்றன்னை நோக்கியுன் னாபரணம்
அரவமேன வுமையைநோக்கி
யரியரவ சயனத்தை யரவுருவ மானத்தை
யறியாய் கொல் சிறிதுமென்ன
நம்பிமனை தோறுமிரந் துணுமாண்டி நீயென்ன
நான்றுதன் அறிவேனென
நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரத
நடந்ததே கரியாமென
வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென
விளங்கிழை யொருத்திதாம்பால்
வீசினது சொல்லென்ன வெண்ணுயிரம் பெண்கள்
மிகுகற்பை நீக்கினையெனப்

பம்புகற் பினிலோ ரிரட்டிப்பு நீக்கினது
பதருமல் நீகேளெனப்
பரமருடன் இவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி யுமைக்காக்கவே

எனவும்,

அச்சுத னளிப்பனில முமதுநே யன்வித்தை
யருளுவன் பலபத்திர
னலமுதவு வன்சமன் பகடீவ னந்தமக்
கானதோ ரெருதுமுண்டே
முச்சிர வயிற்படை யினைக்கொழுவ தாக்குவோ
மோய்ம்புட னிழுத்திறுக்க
மூந்திய வடக்கயிற் றுடன்மற்று நமதன்பர்
முன்போ யிரந்துகொள்வோம்
இச்சையுடை நமதிளைய தனையனு கியகந்த
னினிமையோடு மாடுமேய்ப்பன்
இனியுழுது பயிரிடுதல் நன்றுநன் றிதைவிட்
டிரந்துண்ப தீனமெனவே
கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுளத்திலிதுநற்
காரிய மெனக்கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுதல் உமைக்காக்கவே

எனவும்,

கவுரிகம லாயர னிரந்தசோ றுணவெனக்
கமலைமண் கண்டேனெனக்
காளையொன் றேயாற் கெனமாடு மேய்த்ததைக்
கட்டிடைய னுரோவெனச்
சிவனொருவர் தூதென்ன வத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரதமெனச்
சேரோடு திருடினு னரனெனக் கட்டுண்ட
செய்திநா மறிவோமென

வளைவினட மாடினு னரனேன்ன வவ்வாடல்
அரவமறி யாதோவென
ஆலமதை யுண்டனன் அரனேன்ன மண்ணுண்ட
வதனையறி யோமேவென
விவரமொடு மலைமகளும் மலர்மகளும் இவ்வாறு
விளையாடும் இவர்கள்துணையா
மேவிவரு புத்திரமித் திரகளத் திரருடன்
மேன்மேலு மிகவாழியே

எனவும் சில செய்யுட்களால் ஆசீர்வதித்தருளினார்.

பின்பு தம்மிடத்தன்பு பூண்ட அண்ணுமலை ரெட்டியாரோடு சிதம்பரத்திற்கெழுந்தருளி, அங்கேயொரு திருமடங் கட்டுவித்து அதில் வீற்றிருந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு, சிவப்பிரகாச விகாசம், தருக்க பரிபாஷை, சதமணி மாலை, நால்வர் நான்மணிமாலை என்னும் பிரபந்தங்களைச் செய்தருளி, அத்தலத்தை அருமையாக நீங்கி, பிற தலங்களையும் வணங்கி, திருக்காட்டுப்பள்ளியை யடைந்து, சுவாமி தரிசனம் செய்துகொண்டு தங்கியிருந்தனர். அங்கிருக்கும்போது கல்வியறிவிற் சிறந்த ஒரு பெண் வீதியினிடத்தே உப்பு விற்றலைக் கண்டு இரக்கமுற்றுத் திருநோக்க தீக்ஷைசெய்து அவளது நல்லூழையும் பரிபக்குவத்தையும் உணர்ந்து அவளுடைய புலமையைப் பிறர்க்குப் புலப்படுத்தத் திருவுளங் கொண்டு,

நிறைய வுளதோ வெளிதோ கோளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு

என்னும் திருவெண்பாவைத் திருவாய் மலர்ந்தருளிய மாத்திரத்தே அப்பெண்;

தென்னேங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமாள்
பொன்னேங்கு சேவடியைப் போற்றினேம்—அன்னேன்
திருக்கூட்ட மத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினேம் காண்

என்னும் வெண்பாவைப் பாடிக்கொண்டு, தரிசன வேதியின் எதிர்ப்பட்ட இரும்பு போல மனமுருகி மிக்க விரைவோடு விழுந்து வணங்கி எழுந்து கூப்பிய கரத்தினளாய் நிற்க, அப் பெண்ணிற்கு உண்மைஞானம் உண்டாகும்படிக் கிருபாநோக்கம் செய்தருளினர்.

அதன்பின் காஞ்சிபுரத்தைத்தரிசிக்கவிரும்பி அண்ணுமலைரெட்டியாரோடும் பிரயாணப்பட்டுவரும்போது வழியிலே சாந்தலிங்கசுவாமிகளைக் கண்டு கலந்து களிகூர்ந்தபின் அவரை நோக்கித் "தாங்கள் பேரூர் என்னும் திவ்யதலத்தினின்றும் எதை யுத்தேசித்து எழுந்தருளியது" என்று வினவ அவர், "சிவஞான பாலய தேசிகரைத் தரிசித்தல் வேண்டும் என்னும் பெருங் காதலால் வந்தேன்" என்றுரைத்தருளினர். பின்னர் இருவரும் பேருவகை யுற்றுப் பொம்மயபாளயத்துக்குச் சமீபமாகிய புத்துப்பட்டு என்னும் நகரத்தையடைந்தவுடன் சாந்தலிங்க சுவாமிகள், சுவாமிகளை நோக்கி "நாமிருவரும் சிவஞான பாலயசுவாமிகளைத் தரிசிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் மீது சில தோத்திரங்கள் பாடுக" என்று பிரார்த்திக்க, சுவாமிகள் "நாம் நரஸ்துதி பண்ணுவதேயில்லை" என்று மறுத்து விட்டுச் சாந்தலிங்க சுவாமிகளோடு அவ்வூரிலுள்ள ஐயனர்கோயிலின் புறம்பில் அன்றிரவு துயில்கொண்டார். அப்பொழுது முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி ஒரு பாத்திரத்தில் விடுபூக்களை வைத்து "இவற்றை மாலையாகத் தொடுத்து நமக்கு அணிபக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்து மறைந்

ததாகக் கனவுகண்டு, சாந்தலிங்க சுவாமிகளுக்குத் தெரிவிக் அவர், "சிவஞான பாலய தேசிகர் முருகக் கடவுளிடத்து அதிபத்திமை பூண்ட உள்ளத்தோடு விளங்கியிருந்ததால் அது பற்றியே அக் கடவுள் தங்களுக்குச் சொப்பனத்தில் அத்தேசிகர் மகிமையை யிவ்வாருகப் புலப்படுத்தினர்" என்று வலியுறுத்தினர். அத்தேசிகர்மீது தாலாட்டு, நெஞ்சு விடு தூது என்னும் பிரபந்தங்களைப் பாடிச் சந்நிதானத்திலே அரங்கேற்றி ஞானேபதேசம் பெற்று அந்த ஞானசாரியரது கட்டளைப்படியே தமது தங்கையாகிய ஞானம்பிகையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு விவாகம்செய்து கொடுத்துவிட்டு, தம்மை நெடுநாளாகப் பிரியாது அத்தியந்த அன்புடையராய் உடன் தொடர்ந்து வந்த அண்ணமலை ரெட்டியாரைத் துறைமங்கலத்துக்குப் போகும்படி ஆணையிட்டு ஞானசாரியரைத் தரிசித்துக்கொண்டு அவ்விடத்திற்றனே யிருந்தார்.

சிலகாலம் சென்றபின் ஞானசாரியரிடத்தே விடை பெற்றுக் காஞ்சிபுரத்தை யடைந்து. சுவாமி தரிசனம் செய்து அங்கிருக்கும் பொழுது நிஜகுணயோகி யென்பவராற் கன்னட மொழியிற் செய்யப்பட்டிருந்த விவேகசிந்தாமணியின் ஒரு பாகமாகிய வேதாந்தபரிச் சேதத்திற்கு வேதாந்த சூடாமணி எனப் பெயர் தந்து அதனையும் இரேணுகர் என்னும் கணத்தலைவரால் அகத்திய மகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட சித்தாந்த சிகாமணியையும், பிரபுதேவர் சரித்திரமாகிய பிரபுலிங்கலீலையையும் தமிழிற் பாடியருளிய ஞானசாரியரைத் தரிசிக்க வேண்டும் என்னும் பேராசையால் அவர் மீது திருப்பள்ளியெழுச்சி பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டு பிரபந்தங்களையும் செய்துகொண்டு, அங்ககன்று இடையிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கூவமென்னும் தலத்தை யடைந்து, அங்குள்ள வேளாளர்கள் முதலியோர் வேண்டு

கோளின்படித் திருக்கூவப்புராணம் பாடி அரங்கேற்றி ஞானு சாரியரை யடைந்து தரிசனஞ்செய்து.மேற்சொல்லியபிரபந் தங்களனைத்தையும் சந்நிதியில் அரங்கேற்றி உடன் வசித்தி ருந்தனர். அந்நாளிலே ஒரு நாள் சாயங்காலம் அநுட்டா னம் முடித்துக்கொண்டு ஞானுசாரியரிடத்துத் தாம் ஏகாந் தமாயிருந்து ஷடுஸ்தல இலிங்கா நுபவ முதலியவற்றை ஆராய்ந்து கொண்டு இன்புறும்பொழுது, எதிர் எழுந்த சந்திரோதயத்தைக் கண்டு,

கடன்முரச மார்ப்பக் கதிர்கயிற்ரு லேறி
யடைமதி வின்கழைநின் ருடக்—கோடைமருவும்
எங்கள் சிவஞான வேந்தல் இறைத்தமணி
தங்கியவே தாரகைகள் தாம்

என்னும் வெண்பாவை அருளிச் செய்தார்.

பின்னர் ஞானுசாரியர் அநுக்கிரகித்தபடியே விருத்தகிரி யடைந்து பழமலைநாதரையும், பெரியநாயகி யம்மையாரை யும் தரிசித்து வண்ங்கி, அவ்விடத்திலே தம்பொருட்டு ஒரு திருமடம் அமைத்து எதிர்கொண்டு வணங்கி நிற்கும், சிதம் பரபூபதியைச் சிறப்பித்து,

வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கும்
எக்கட் கினிய சிவஞான தேவ னிசைவுகோடு
திங்கட் பவனி யிருகான் முதுகுன்றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மிடமிதுவே

என்னும் கட்டளைக் கலித்துறையைப் பாடியருளி அத்திரு மடத்து அடைந்து வீற்றிருந்து, பழமலையந்தாதி, பிக்ஷாடனநவ மணிமாலை, கோச்சகக் கலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலடியாசிரிய விருத்தம், பெரியநாயகியம்மை கட்டளைக் கலித் துறை என்னும் பிரபந்தங்களைத் திருவாய் மலர்ந்தருளினுர். ஒரு நாள் மணிமுத்த நதியிலே ஸ்நானஞ்செய்து வரும்

பொழுது, அதனருகிலிருந்த மாஞ்சோலையின் புறத்து வறிதே வீழுந்து கிடந்த மாங்கனியைக் கண்டு, இது சிவலிங்கப் பெருமானுக்கு நைவேத்தியத்திற்கு உபகரணமாகும் என்று கருதி யெடுக்க, அதுகண்ட அச்சோலைக் காவலாளன் மகிமையறியாது மடிபிடித்திழுத்து மனவருத்தஞ்செய்தனன். சுவாமிகள், அவன் சிவாபராதியா யிருத்தலின் அவனைத் தண்டித்துச் சுத்தனுக்கத் திருவுளங்கொண்டு,

அடுத்துவருந் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவும் சத்தியமே யானல்—எடுத்ததொரு
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்

என்னும் வெண்பாவைப் பாடிச் சூரியனுதயமானவுடன் உயிர்துறக்கும்படிச் செய்து நற்கதியிலடைவித்தனர்.

இங்ஙனம் இருக்கும் நாளிலே சிவஞான தேசிகர் தமக்கு ஐந்நூறு வயது பூர்த்தியானமையால் உலகின்கண் இருத்தலில் உவர்ப்புத்தோன்றி அப்பொழுது சகல பற்றுக்களையும் ஒழித்து விளங்கும் சிவப்பிரகாச சுவாமிகளுடைய சித்த விரக்தியைத் தாமறிந்திருப்பதால், பரிபக்குவராகிய வேரூர் மாணுக்கருக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து ஞானேபதேசம் புரிந்து அவரைத் தமக்குப் பதிலாக நியமித்துவிட்டு வைகாசி மாதத்தில் பௌர்ணமி திதியோடு கூடிய விசாக நக்ஷத்திரத்திலே, சிவயோக சமாதியிற்கூடி சித்தியால் திருமேனியை விபூதியாக்கி ஒடுக்கித் தாம் இஷ்ட லிங்க பரசிவத்திலே கலந்தருளினர். இதனையறிந்த சிவப்பிரகாச சுவாமிகள் மனம் கலங்கிப் பொம்மபுரத்தையடைந்து ஆசிரியர் ஒடுங்கிய குகையுட் சென்று அடியற்ற மரம்போல விழுந்து பலமுறை வணங்கி துதித்து "கருணாநிதியே! இக்கடையேனையும் விரைவிலே திருவடி

யிற் சேர்த்தருளுக" என்று பிரார்த்தித்துத் தாமியற்றிய கலம்பகத்தையும் சந்நிதியில் அரங்கேற்றிக் குகையுள்ளே ஞானசாரியரைப் பாவனரூபமாக வழிபட்டுக்கொண்டு மூன்றும் பட்டத்துச் சுவாமிகளோடு தங்கியிருந்தனர். ஒரு நாள் தனிமையாய்ச் சமுத்திரத்தையடைந்து அங்குள்ள மணற்பரப்பிலே தாமெழுதிய நன்னெறி வெண்பா நாற்பதையும் எழுதிவரும்படித் தம்பின்னோராகிய கருணைச் சிவப்பிரகாச சுவாமிகளுக்குக் கட்டளையிட்டு, ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள்தோறும் யாத்திரை புரிந்துவந்தனர். அக்காலத்திலே அகராதி செய்த வீரமாமுனிவர் என்பவர் எதிர்ப்பட்டு ஏசு மதமாகிய தங்கொள்கையை நாட்டுதற் பொருட்டுத் தருக்கம்செய்ய உடனே அக்கொள்கையை மறுத்து ஏசுமத நிராகரணம் எனப்பெயரிய ஓர் நூலை யருளிச்செய்து ஒவ்வொரு தலங்களையும் இவ்விரண்டு வெண்பாக்களால் தோத்திரம் செய்து முடித்து நல்லாற்றூரை யடைந்து ஞானசாரியரது திருமடத்தில் வீற்றிருந்தார்.

இவ்விடத்து விடைபெற்றுச் சென்ற கருணைப்பிரகாச சுவாமிகள் இஷ்டலிங்க அகவல் பாடி முடித்து, சீகாளத்திப் புராணத்தைப் பாடத் தொடங்கிச் சீகாளத்திச் சருக்கம் வரையும் தமிழில் மொழிபெயர்த்தருளித் திருவெங்கை மாநகரத்தில் பதினெட்டாம் வயதில் சிவலிங்க வைக்கியமாயினர். அதனையறிந்த சிவப்பிரகாச சுவாமிகள் அவ்விடத்தே சென்று,

முன்னமோரு தமிழ்ப்புலவன் தனையுண்டு கண்டசுவை முதிர்ச்
சியாலே

தன்னியலை முழுதமுரைத் தமையாமுன் னினைக்கவர்ந்து
சடங்கா ளத்தி

மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே
யென்னுடன்வந் தவதரித்த இளங்கருணைப் பிரகாசன் என்னுங் கோவே

என்னும் விருத்தத்தைப் பாடி நிற்க, வேலைய சுவாமிகள்,

ஆண்டதனுல் எனையோவ்வாய் வித்தையினில்
தமையனினும் அதிகம் என்றே
பூண்டவுல கதனினுள்ளோர் புகல்வதுகேட்
டிருந்துமேன்ன பிதுமை தானே
காண்டகுகண் மணியேநல் இளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையேன் றறிந்திருந்தும் உயிர்தரித்தேன்
யானுமிகு வன்னெஞ் சேனே

என்னும் விருத்தத்தைப் பாடித் துக்கித்துக்கொண்டு சுவாமிகளைப் பிரியலாற்ருது வருந்தி நின்றனர். அவரை யொருவாறுதேற்றி நிறுத்திவிட்டுத் தாம் நல்லாற்றூரையடைந்து திருமடத்திலிருந்துகொண்டு சிவநாமமகிமையும் இஷ்டலிங்கப் பெருமாள் மீது அபிஷேக மாலையும், நெடுங்கழிநெடிலும், குறுங்கடி நெடிலும், நிரஞ்சன மாலையும், கைத்தல மாலையும், சிகாளத்திப் புராணத்தில் கண்ணப்பச் சருக்கமும், நக்கீரச் சருக்கமும் செய்தருளிச்சிவா நுபவச் செல்வராய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்து, முப்பத்திரண்டாம் வயதில் கன்னிமதியில் பௌர்ணமித் திதியில் இஷ்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினுர். அப்பொழுது வேலைய சுவாமிகள்,

அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான் — முல்லை
யரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்

என்னும் வெண்பாவைப் பாடி அளவிடப்படாத அருந் துயர்க் கடலின் மூழ்கி ஒருவாறு தெளிந்து சிவப்பிரகாச சுவாமிகளது சமாதி தரிசனம் செய்துகொண்டு, அவ்விடத் தினின்றும் நீங்கி நல்லூர்ப்புராணம், இஷ்டலிங்கக் கைத்தல மாலே, கும்பகோணச் சாரங்கதேவர் சரித்திரமாகிய வீரசிங் காதன புராணம், குகை நமச்சிவாய தேசிகர் சரித்திரமாகிய நமச்சிவாய லீலே, கிருஷ்ண சரித்திரமாகிய பாரிசாத லீலே, மயி லத்திரட்டைமணிமாலே, மயிலத்துலா என்னும் பிரபந்தங்களேச் செய்தருளி சீகாளத்திப் புராணத்தை முடித்துப் பெருமத்தூர் மடத்தில் எழுபத்திரண்டாம் வயதில் சிவலிங்கவைக்கியமா யினர்.

II

இனி மேற்கூறிய வரலாற்றினுள் கூறப்படாதனவும் மாறுபட்டனவுமான கருத்துக்களே மட்டும். சேயூர்-ப. கந்த சாமித் தம்பிரான் பதிப்பித்த சிவஞானபாலய சுவாமிகள் தாலாட்டு முதலிய நூல்கள் அடங்கிய பதிப்பி லிருந்து எடுத்து எழுதுவேம்.

(1) குமாரசாமி தேசிகர் என்பார் முதலில் சைவராயி ருந்து வீரசைவரான வரலாறு அப்பதிப்பில் குறிப்பிடப் படவில்லே. அவரைப் பற்றித் ' திருத்தொண்டை மண்டலத் துள் ஸ்ரீ காஞ்சீபுரியில் வசித்திருந்த நிகமாகம மோக்தசிவாத் வைத ஸித்தாந்த ப்ரவர்த்தக வீரமாஹேஸ்வரரும்-ஏகவிம் சதி தீக்ஷாஷ்டாவரண பஞ்சாசார சதுஷ்ஷஷ்டி சீலஸம்பந் நரும்-ஸச்சிதாநந்த ஸ்வரூப ஏகலிங்க நிஷ்டாபரரும் ஆகிய குமாரசாமி ஐயர்'' என்று குறிப்பிட்டிருக்கிறது. அவர் திரு வண்ணுமலேக்குச் சென்றதாகவும் கூறவில்லே.

(2) திருக்காட்டுப்பள்ளி நிகழ்ச்சி கூறப்படவில்லே.

(3) உளுந்தூர்ப்பேட்டை நிகழ்ச்சி யொன்று புதியதா கக் காணப்படுகின்றது. அது வருமாறு:—

"ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்) சாதாரண மும்மல ஆத்ம கோடிகளை ஜீவாந்தகாலத்தில் வலது செவியில் சிவ தாரகத்தை அநுக்கிரகித்து தத்சொரூபத்தில் சேர்க்கும் முக்கிய (விருத்தகாசி)யில் நமது திருமடத்தில் வசித்துக் கொண்டு உளுந்தூர்ப்பேட்டை முதலிய மகமை வரும் படியை யடியார்களுக்கு அமுதிட்டிருக்கும்படி கட்டளை பெற்று, சிவப்பிரகாச சுவாமிகள் விருத்தாசலம் சேர்ந்து (வெங்கைப் பழமலை) என்னும் கலித்துறையருளி, திரு மடம் அடைந்திருந்து உளுந்தூர்ப்பேட்டைக்கு அடியாரோ டும் சுவாமிகள் செல்ல அக்காலம் துர்ப்பிட்சமாய் இருந்த படியால் அவ்வூரில் ஜவுளிக் கடை வியாபாரம் சோணசைல செட்டியென்பவர் (அரும்புக்கோ கொத்துக்கோ) அடியார் வந்ததென்று சொன்னதை யறிந்து (கருந்தலை செந்தலை) யென்னும் கலித்துறை யருளிச் செய்ய, அதனல் சஞ்சல மடைந்து மற்றவர்கள் வணங்கி மகமை வரும்படியை நித் யானந்த பூசை திரிவித லிங்கார்ப்பிதமாகும்படிக் கொடுத்து வந்தார்கள். (பக்5-6)

இவ்வரலாற்றில் 'வெங்கைப்பழமலை' என்னும் பாடல் வந்தமைக்குரிய காரணம் கூறப்பட்டிலது.

(4) 'கடல்முரசமார்ப்ப' என்ற நிலா வருணனைப் பாடல், 'அடுத்துவரும் தொண்டனுக்கா' என்ற பாடலைப் பாடிய பின்னர்ப் பொம்மபுரம் அடைந்த ஒருநாள் பாடப் பட்டதென்று கூறப்பட்டுள்ளது.

(5) ஏசுமத நிராகரண வரலாறு இல்லை.

(6) ஞானம்பிகையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு மணம் செய்து கொடுத்ததாகக் கூறப்படவில்லை.

(7) கீழ்வரும் வரலாறும் முதல் வரலாற்றில் காணப்படாதது.

கும்பகோண ஸ்தலம் வீரசிங்காதன சாரங்கதேவர் சிஷ்யரும் குடும்ப விருத்தியுடையவரும் கல்வி சம்பத்துள்ளவரும் ஆகிய வில்வநல்லூர் ஸ்தலத்திற்கு அடுத்த தென்மேற்கிலுள்ள நல்லாற்றூர் மடத்தில் வசித்திருந்த, கனக சபை ஐயர், சிதம்பரம் அம்பலத்தாடும் ஐயரோடு சாஸ்திரங்களைக் குறித்துத் தர்க்கம் செய்ய அவர் அருவருப்படைந்து பஞ்சாட்சர மறுதலை உச்சாடனம் செய்தார். அதனால் நல்லாற்றூர் மடத்தினது ஒரு ஸ்தம்பத்தில் தைலம் உற்பத்தியாய் சதாகாலம் கசிந்துகொண்டிருந்தது. அத்தைலவாடையினால் கனகசபை ஐயர் குடும்ப ஜனம் லயப்பட்டு வரும்போது முடிவில் பூர்ண கர்ப்பிணி (நித்யசௌபாக்யவதி) அம்மாள் மாத்திரம் தனித்துத் தப்பி யிருப்பதைத் தெரிந்த கிராமாதிபதிகள் ஸ்ரீமத். சிவஞானபாலயசுவாமிகளது மகிமாதிசயங்களைக் கேள்விப்பட்டு அழைத்துக் கொண்டுவந்து பொம்மயபாளையம் ஸ்ரீமத். குருசுவாமிகள் சந்நிதானத்தில் அடைக்கலம் புகுவித்தார்கள். சுவாமிகளது திருவுள மிரங்கித் திருமடத்திற்கடுத்த ஒரு கிரகத்தில் இருக்கக் கட்டளையிட்டருளிய பின்பு உடனே ஆண் சந்தான உற்பத்தியாகிப் பட்சத்திற்குள் சிவலிங்க தாரண அஸ்தமஸ்தக ஸ்தூல பஞ்சாட்சர உபதேசாநுக்கிரகம் செய்த பின்னர் அந்தஅம்மாள் தன்வம்ச விருத்தியாயிருக்கும்படி அநுக்ஞை பெற்று லிங்கயிக்கியமானார்கள்.

ஸ்ரீஞானாசாரியரது திருவடிகளே அக்குழந்தைக்குத் தாயகம் தமது க்ஷீரணுவேத்யப் பிரசாதமே ஆகாரமாகவும் திருப்தி யடைந்து வளர்ந்துவந்த காரணத்தினால் (அமிர்

பாணி) என்னும் திருநாமம் பெற்றுக் கல்விப்பெருக்கம் அடைந்திருந்தனர்.

அப்போது (ஸ்ரீமத். சிவஞானபாலய சுவாமிகள்) தமது மாணுக்கராகிய (அமிர்தபாணி) ஐயருக்கு—சிவப்பிரகாச சுவாமிகள் கனிஷ்டராகிய-கருணைப் பிரகாச சுவாமிகளது புத்ரி (சிவாநந்தம்) என்னும் கன்னிகையைச் சந்நிதானத்திஞல் (அமிர்தபானத்திஞல் ஆநந்தமடைவது) சகசமானதால் விவாகம் செய்வித்து நல்லாற்றூர் மடமானியமும் (பில்வ வனஸ்தலம்) ஆகிய வில்வநல்லூர் தக்ஷிணக்கோபுரம் சிலா சாதனப்படி கோபுர தரிசனம் (பூர்வபாகம்-உத்ரபாகம் மகத்து வரும்படியை புதுவை மடத்துச்சரபதிக்குக் கொடுத்திருப்பதன்றி) தக்ஷிணபாக பச்சிமபாகம் மகத்து வரும்படியைக்கொண்டு (ஸ்ரீமத். காமீசுரர்) சந்நிதியில் அகண்டதீபம் நடத்திவரும் மகஸ்தல அதிகாரமும் அமிர்தபாணி ஐயருக்குக் கொடுத்துக் கட்டளையிட்டருளியது.

(சிவப்பிரகாச சுவாமிகள்) சிவாநந்தக் கன்னிகை பிரிவாற்றுமையின் குறிப்பைத் தெரிந்து நீயும் உனது சந்ததியார் முதலானவர்களும் செய்யும் பக்திபூர்வ உபசாரங்களை நாம் அங்கீகரித்துத் துணையிருப்போம் என்று திருவாக்கிட்டது.

இந்தப்படி விடைபெற்றுக்கொண்டு அமிர்தபாணிஐயர் சிவாநந்த பாரியாளுடன் நல்லாற்றூர்மடம்சேர்ந்து இருகாச்சிரமதருமம் நடத்திவந்தனர்.

பின்பு ஸ்ரீமத், சிவஞானபாலய சுவாமிகள் கட்டளையைப்பெற்று சிவப்பிரகாசசுவாமிகள் (திருவக்கரை) ஸ்தலத்திற்கடுத்த உத்தரபாகத்தில் விளங்கும் (ஸ்ரீமாயூராசல க்ஷேத்திரம்) சென்று தரிசித்து நல்லாற்றூர் சேர்ந்து திரு

மடத்தில் எழுந்தருளி(சிவநாமமகிமை-அபிஷேக மாலை-நிர ஞ்சன மாலை-கைத்தல மாலை-இஷ்டலிங்க நெடுங்கழி நெடுங்கழி நெடில்-குறுங்கழி நெடில்) அருளிச்செய்து வாசம் செய்திருந்தது. (பக், 8-11)

(8) வேலையர் ஓலைப்பாடியில் சமாதியாயினர் என்பது கூறப்பட்டிருக்கின்றது. (முன் வரலாற்றில் பெருமத்தூர் மடத்தில் என்று காணப்பட்டது.)

[தொடரும்]

வேண்டுகோள்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் வெளியிடப்படும் செந்தமிழ்த் திங்களிதழின், 57-ஆவது தொகுதி சென்ற பங்குனியோடு முடிந்து இந்தச் சித்திரைமுதல் 58-ஆவ்து தொகுதி தொடங்குகின்றது என்பதையும் வழக்கம்போல் பல தமிழ்ப்பேராசிரியர்கள், அறிஞர்கள் முதலியோர் தமது ஆய்வுக்கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதிவரு கின்றார்கள் என்பதையும்,குறிப்பாக வித்துவான் வகுப்பிற் குரிய இலக்கணக் கருத்துக்களை மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு அவைபற்றிய பல கட்டுரைகள் தொடர்ச்சி யாக வெளியிடப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித் துக்கொள்வதோடு, செந்தமிழ் ஆண்டு உறுப்பினர்களா யுள்ளவர்களும், மற்றவர்களும் உறுப்பினர் (சந்தா) கட்ட ணத்தை விரைவில் அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள் கின்றோம்.

ஆண்டுக்கட்டணம்	ரூ. 4—50
மாணவர்கட்கு	ரூ. 3—00

—பொறுப்பாசிரியர்.

ஆனுங்கூர் அகத்தீச்சுரக் கல்வெட்டுக்கள்

புலவர் ச. கணபதிராமன் P. O. L.
எம். ஓ. எல். ஆராய்ச்சி மாணவன்.

ஆனுங்கூர் என்பது தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் (மயிலாடுதுறை) வட்டத்தில் உள்ளதொரு ஊராகும். இது செம்பியன் மாதேவியரால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. இதில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகள் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளிவந்தில. அவைகளுள் மூன்று கல்வெட்டுக்களைப் படித்து எழுதிவந்தேன். இவைகள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுமென்று வெளியிடுகின்றேன்.

கல்வெட்டு எண் க.

இடம்:- கருப்பக இல்லின் வடபுறச் சுவர்:-

வரி 1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவந சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் செயங்கொண்ட சோழவள நாட்டு ஆனுங்கூர் திருக்கற்றளி மகாதேவர் கோயில் தேவர் கன்மிக்கும் மாகேசுரக் கண்காணி செய்வார்க்கும் ஸ்ரீ காரியஞ் செய்வானுக்கும்...... திருநாமத்துக் காணியும் தேவதான இறையிலியும் .....

வரி 2. ஆன இந்நாட்டு வெள்ளை விநாயக மங்கலம் நிலம் அஞ்சரையே ஒருமா வரையே அரைக்காணி முந்திரிகைக் கீழரையே ஒருமா வரைக்கும் காவேரித் தென்கலையிலே பதிநாற் கோல்தறை பற்றிட்டு......பதினெஞ்சாவது வரையும் செய்துவாராதே இத்தேவற்கு நம்நு வது முதல் இ...... (ற) ரைக்கோல் தறையாக செய்வித்துக்கொண்டு வாராநின்றார்கள்......

வரி 3. என்றும் இப்படியாகையிலே இவ்வூர்க்கு இரப்புறையே திரப்பின்றியே இராநின்றதென்றும் இப்படி தவிர்க

இவ்வூர்க்கு முன்பு பற்றிட்டு வருகிற இடத்து மேற்கடைய ஐங்கோல் தறை இவ்வூர்க்கு இப்பற்றுகவும் நீக்கி நின்ற கோலில் பதினேஞ்சாவது வரையும் செய்துவந்த கோலுக்கு மேலேற்றமாக செய்வித்த கோல் ஏழரையும் முன்பு செய்து......

வரி 4. வந்த திருவழுந்தூரரேசெய்யவும். நீக்கி நின்ற கோல் ஒன்பதும் முன்பு ஊர்களாய வாணுதிராயர் நிச்ச யித்தபடியே இட்டு இந்நாட்டு அரை சூர்க்குப் பற்றுக இடசெய்யவும். காட்டானமைக்கு காசு தண்டும் ஆண்டு கள் இவ்வெள்ளை விஞபக மங்கலத்துக்கும் இறுக்கும் காசு தவிரவும் கடவதாகப் பெறவேணுமென்று நித்திய

வரி 5. நமக்கு சொன்னமையால் இப்படிச் செய்யக் கடவதாகச் சொல்லி கணக்கிலும் இட்டுக்கொள்ள கடவார் களாக வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னேம். எழுதி ஞன் திருமந்திரஓலை இராசநாராயண மூவேந்தவேளான் எழுத்து. இவை வில்லவராயன் எழுத்தென்றும் இவை வாணதராயன் எழுத்தென்றும் இவை விழிஞத் தரையன் எழுத்தென்றும் ....

வரி 6. ராயன் எழுத்தென்றும் இவை வேணாட்டரை யன் எழுத்தென்றும் இவை காடவராயன் எழுத்தென்றும் இவை காடவன் நாராயணன் எழுத்தென்றும் இவை மூவேந்தராயன் எழுத்தென்றும் இவை தொண்டைமான் எழுத்தென்றும் யாண்டு முப்பத்து நாலாவது நாள் நூற்று எண்பத்து ஆறிஞல் பிரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

கல்வெட்டெண் ௨.

இடம்:- அர்த்த மண்டபத்தின் வடசுவர்

வரி 1 ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலைத்

2 திகழ்தரப் பாமாலை மலி

3 ந்த பருமணித் திரள் புயத்திரு நிலம

4 டந் தை யோடு ஜயமகளிருப்பக்

5 கனவரை மார்வன் தனதெனப் பேற்று தி

6 ருமகள் யொரு தனியிருப்ப கலைமகள் சொற்றிரம் புணர்

7 த்த கற்பினளாகி விருப் பொடு நாவகத்திருப்ப திசை தோ

8 றுந் திகிரி யோடு செங்கோல் நடப்ப அகிலபு

9 வன முழுதுங் கவிப்பதோர் முழுமதிபோல் வெண் குடை

10 மீமிசை நிற்ப கருங்கலி யொளித்து வன்பிலத்
திடைக் கிடப்பகு

11 ளத் திடைத் தெலிங்க வீமந் விலங்கல்மிசை
பேறவும் கலிங்க பூ

12 மி கன லேரி பருகவும் ஐம்படைப் பருவத்து
வெம்படைத் தாங்கி வே

13 ங்கை மண்டலந் தாங்கி நிதிருந்து வடதிசை யடிப்
படுத்தருளி தெந்றி

14 சைத் தருமமும் தவமும் தானமுந் தழைப்ப வேதமும்
மெய்மையும் ஆதியுகம்

15 போலத் தலைத் தலை சிறப்ப வந்தருளி வேலற் கரும்
போர்ப் புலியா

16 ணை பார்த்திவர் சூடநிறை மணிமகுடம் முறைமையிற்
சூடி மன்னுயி

17 ற் கெல்லாம் மிந் னுயிர்த்தாய் போற்றண்ணளி
பரப்பித் தனித்த நிபர

18 த்து மண் முழுது களிப்ப மனுநெறி வளர்த்துத்
தன் கோயிற் கொற்ற

19 வாயிற் புறத்து மணி நா வொடுங்க விஜையமும்
புகழும் மோலோ

20 ங்க செழியர் வெஞ் சுரம் புகச் சேரலர் கடல்புக அழிதரு சிங்கணர்

21 அஞ்சி நெஞ்சிலமரக் கங்கர் திறையிடக் கன்னாடர் வெற்றிடக் கோ

22 ங் கண ரோதுங்கக் கோங்கணர் சாய மற் றேத்திசை மன்னரும்

23 தங் தமக் கர ணெனத் திருமலர்ச் சேவடி தொல்லை யேழுலகுந் தொழு

24 தெழத் தோன்றிய முல்லை வாணகை முக்கோக்கிழானடி

25 யோடு சங்கரன் இமையச் சிமையத் திருந்தனள் எனப் பொருந்தி யுடநி

26 ருப்ப ஆங்கவன் மசிழும் கங்கை யொட்பாகு தெரி வையர் தில

27 தம் தியாக பதாகை

28 புரிகுழல் மடப்பி

29 டி புனித குணவனிதை

30 திரி புவன முடையாள்ளிவங்

31 திரு வுளத் தருள முது

32 முடையா ளென வட

33 னிருப்பச் செம் பொங்

34 வீர ஸிம் ஹா ஸநத்து

35 முக் கோக் கிழானடிக

36 ளோடும் வீற்றிருந்தருளி

37 ய கோப் பர கேஸரிபற்ம

38 திகழ் ஸ்ரீ விககிரம சோ

39 ழ தேவற்கு யாண்டு பத்தாவ

40 து இஷப ஞாயற்று அ

41 பரப ஷத்து ஏகாதசி

42 யும் வியாழக் கிழமை

43 யும் பெற்ற உத்த ரத்து

44 நாள் ராஜ நாராயண

45 வளநாட்டு தி
46 ரு வழுந்தூர் நாட்டு பிர் மதே
47 யம் ஆ நாங் கூர் மகாஸ
48 பை யோம் இவ்வூர் திரு
49 மேற் கோயில் திரு ஞராயண
50 பிரியத் தாழ்வார் கோயில் கூட்டங்
51 குறைவறக் கூடியிருந்து உடையார் திருவஹ
52 த் தீஸ்வர முடையார் மூலப் பிரத்திய ராகிய ஆதி
53 சண்டேஸ்வர தேவற்கு நாங்கள் முன்பு ஸபை
54 ப விலையாக விற்று குடுத்துக் கொண்ட அன்றுடு நாற் காசு
55 ய இக்காசு கொண்டு இந்நிலங் காணியாக விற்று
56 நாங்கள் இறைகொண்டு வருகிற நிலம் இத்தேவ
57 ற்கு நாங்கள் இறையிலி செய்து குடுத்த பரிசாவ
58 து இவ்வூரில் வெற்றி வாய்க்கு வடக்கு மண் கொண்டா
59 னென்று பேர் கூவப்பட்ட நிலத்துக் கீழ்பாற் கெல்லை
60 ஸ்ரீ யநக் கன் சங்கர நிலத்துக்கும் ஸபையார்
61 தாட்டச் செய் யென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு
62 மேற்கும் தென்பாற் கெல்லை வெற்றி வாய்க்காலுக்கு
63 வடக்கும் மேல்பாற் கெல்லை இளங்காரி குடையார்
64 தில்லை யாளி யாரான ராஜ ராஜ வள தரை
65 யா நிலத்துக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை
66 ஸபை யோம் பொதுக் கொல்லைக்குத் தெற்கும் ஆக இவ்வி
67 சைந்த பெரு நான் கெல்லையுள் நவேட் பட்ட நிலம்
68 குழி கூசருய மனை குழி ருய ஆக
69 குழி ஆயிரம் திருவுல களந்த கோலால் நூ
70 றுகுழி கொண்ட தொரு மாவாக வந்த
71 நிலம் ரு இந்நிலம் அரையும் மிகுதிக்கு றை
72 ற வுள்ளடங்க உள்நிலம் குழி ஒழிவின்றி உள்ளதே
73 லாம் ஸந்திராதித்வற் ஸாஸ்வதமாக இறையிலேயே

[தொடரும்]

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று

வெளிவரும் திங்களிதழ்

ஐம்பத்தேழாந் தொகுதி

Volume 57

பிலவ ஆண்டு

1961—1962

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை.

4

செந்தமிழ்

உள்ளுறை

பிலவ ஆண்டு 1961-62 தொகுதி ருஎ பகுதி க-12

1. அறவியல் (கவிதை) 239, 276
வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு

2. அறவியல் (கவிதை) 323
பண்டித மீ. கந்தசாமிப் புலவர்

3. அறவியல் (கவிதை) 379
புலவர்மணி வித்துவான் தி. கி. சுந்தரமூர்த்தி

4. அறிக்கை (செந்தமிழ்) 290

5. அறிந்துமறிந்திலம் 331
கா. பாக்கியரத்தினம், கொழும்பு.

6. இடங்காட்டும் வரலாற்றுப் படங்கள் 304
கா. மாரன்

7. இடைக்காலத்தில் உரைநடை 6
இரா. நடராசன் எம். ஏ., எம்.லிட்

8. இருபதாம் நூற்றுண்டின் உரைநடை வளர்ச்சி 33
இரா. நடராசன் எம். ஏ., எம். லிட்

9. இளம்பூரணர் எழுத்துரை 19, 76, 115, 144, 163. 217, 227
வித்துவான் ஆ. சிவலிங்கனுர்

10. இளவேனிற் பதிகம் (கவிதை) 334
புலவர் ந. செகதீசன்

11. உலகச் சமயங்கள் 1, 65, 97
கி. பழநியப்பன்

12. உலா 286
மது ச. விமலானந்தம் எம். ஏ.

13. எழுத்தச்சன் 325
புலவர் எஸ். சி. சுப்பிரமணிய பிள்ளை

14. ஐம்பத்தாறுந் தொகுதி உள்ளுறை 29

15. ஐவகை ஆற்றல்—நிலம் 309
பேராசிரியர் ஆர். கே. விசுவநாதன்

16. ஒலியியல் 291
S. அகத்தியலிங்கம், அமெரிக்கா

17. ஒலியன் வரலாறு 252, 267
S. அகத்தியலிங்கம், அமெரிக்கா

18. கலங்கச் செய்தாய் காவேரி (கவிதை) 123
அதிரை இளஞ்சித்தன்

19. கவலை வேண்டாம் 188
இராம. சுந்தரம் எம். ஏ.

20. குறிப்பு வினையும் பெயரும் 73
மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்

21. கையறுநிலை (ரா. பி. சே. மறைவு குறித்து) 58
1. அ. கி. பரந்தாமனர் எம். ஏ. (கவிதை)
2. பண்டித முத்துசாமிப் புலவர்

22. சங்கச் செய்திகள் 64, 91

23. ச. சோ. பாரதியார் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்த நூல்களின் பட்டியல் 384

24. சாத்தனும் மாடலனும் 223
ஆ. துரைக்கண்ணு

25. சிதைந்த நாரயுணபுரம் கல்வெட்டுக்கள் 235
கா. மாரன்

26. தமிழ் இலக்கிய வாயில் 154, 175, 195, 299
அ. கி. பரந்தாமனர் எம். ஏ.

தமிழர் வரலாற்றில் தருக்காக்குடி 350
கா. மாரன்

26. தாகூர் நெறியது காணீரோ (கவிதை) 152
அதிரை. இளஞ்சித்தன்

29. துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் 342
வித்துவான் ஆ. சிவலிங்கனர்.

30. நச்சினர்க்கினியரும் மெய்ம்மயக்கமும் 156
மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்

31. நமது வாழ்வு (கவிதை) 48
மு. வைத்திலிங்கம்

32. நல்லிசைப் புலவர்கள் 243, 259
பண்டித இராம. சுப்பிரமணிய நாவலர்

33. நான் வியக்கும் பாவலர் 334
நாவரசன்

34. பழமுதிர்சோலை 139, 182
கி. பழநியப்பன்

35 பாட்டில்களில் கப்பல்கள் 359
சசிகலா திரிவேதி

36. பிழை திருத்தம் 321

37. புளூம்பீல்டு
S. அகத்தியலிங்கம், அமெரிக்கா

38. பொருளியல் (கவிதை) 376
பண்டித. முத்துசாமிப் புலவர்

39. பொன்மொழிகள் 56, 88
மு. வ.

40. மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு 13, 41
புலவர் இரா. இளங்குமரன்

41. மதிப்புரை 16 127. 288, 318

42. மதுரை நாயக்கர் காலத்து மதுரை நாட்டுத்
தமிழ்ப் புலவர்கள் 106
அ. கி. பரந்தாமனுர் எம். ஏ.

43. முயல்கள் வர்ண முட்டை போட்ட நாளிலே செர்மனி
யின் பழைய ஈஸ்டர் வழக்கங்கள் 356
சசிகலா திரிவேதி

44. வழுக்காத்தல் 49, 83, 125, 129
வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு

45. வள்ளுவர் வழங்கும் மொழி நூல் 362
வித்துவான் வீ, ப, கா. சுந்தரம் எம். ஏ.

மதிப்புரை

நூல்: சிவபோதம்

வெளியீடு: திருவாவடுதுறை ஆதீனம்

உலகசமயங்களில் சைவசமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. அதுவே தமிழ்நாட்டில் மட்டுமின்றி அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும், தெற்குப்பசிபிக் தீவுகளிலும், அராபிப்பாலைவனங்களிலும் மிகமிகத் தொன்மையான காலத்திலிருந்தே போற்றப்பட்டு வந்திருக்கின்றது என்பது அண்மையில் பண்டைய நாகரிகத்தைப் பற்றி நடந்த ஆராய்ச்சியினால் அறியப்படுகின்றது. மற்றைய நாடுகளிலே இன்று சிவவழிபாடு நின்றுவிட்டாலும் தமிழகத்தில் மிகவும் சிறந்து வளர்ச்சியடைந்துள்ளது.

சைவசமயத்தின் கோட்பாடுகளைப் புகட்டும் நூல்கள் மிக உயர்ந்த முறையில் எழுதப்பட்டுள்ளனவாதலின் அவற்றை இக்காலத்துப் பிறசமய அறிஞர்களும் பெரிதும் மதித்து எழுதி வருகின்றனர். அத்தகைய நூல்கள் பலவற்றைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் வெளியிட்டுச் சைவ சமயத்திற்குப் பெருந்தொண்டு புரிந்து வருகின்றனர். அவர்கள் வெளியிட்டுவரும் நூல்களில் ஒன்று இச்'சிவபோதம் ஆகும். இருநூற்றிருபத்திரண்டு பக்கங்களைக் கொண்டுள்ள இந்நூலில் சைவசமயத்தின் உண்மையான தன்மையைப் பற்றியும், ஆன்மா, ஆலயவழிபாடு, தீக்கைவிரதம், மெய்யுணர்வு முதலியவற்றைப் பற்றியும் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன.

உடலனைத்துமுள்ள உயிர்ப்பணி ஆற்றுவதே மனித வாழ்வின் மிகச்சிறந்த நோக்கம் என்பதை அழகுபடத் தெரிவிக்கின்றது. இந்நூல் இதுபோன்ற பலநல்ல உயர்ந்த கருத்துக்களை யாவரும் எளிதில் அறியும் வண்ணம் அமைந்துள்ளது இந்நூல். ஆகவே சைவசமயமே மெய்ச்சமயம் என்பதை அறிய விரும்பும் யாவரும் இந்நூலைப் படித்துத் தெளிவு பெறுவர் என்பது உறுதி.

— பொறுப்பாசிரியர்

நூல்: திராவிடத்துப்பரணி
ஆசிரியர்: கவிஞர் சி. அரங்கசாமி
வெளியீடு: திருக்குறள் பதிப்பகம்
இராசிபுரம் (சேலம் மாவட்டம்)
விலை: 2 ரூ.

'திராவிடத்துப் பரணி' என்னும் நூலை இராசிபுரம் கவிஞர் அரங்கசாமி அவர்கள் பண்டைய மரபினைத் தழுவி, அழகுற எழுதியுள்ளார். களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பாராட்டிப் பாடுவது பரணி. ஆனால் இன்று போருக்கெனத் தனிக் களமுமில்லை. களிறு கொல்வது மட்டும் வீரம் எனக் கருதலுமில்லை. ஆதலின் இந் நூலில் புதுமுறையில் பரணி பாடியுள்ளார் ஆசிரியர். தமிழ் மீதும், தமிழர் மீதும் தமக்குள்ள அளவிலாப் பேரவாவினை இந்நூலின் மூலம் தெளிவுறக் காட்டியுள்ளார்.

'அடியோ முடியோ இலதாகி அறிவே இறையாய் விளங்குகின்றது' என்று தொடக்கத்திலேயே எடுத்துக் கூறுவதன் மூலம் தமது இறைபற்றிய கொள்கையை நன்கு காட்டுகின்றார். கடைதிறப்புப் பகுதியில் பிறரெல்லாம் காமச்சுவை பற்றிப் பாடுவதாயிருக்க, இவரோ புது முறையில் மனைமகளிர், அறமகளிர் என்றெல்லாம் தலைப்பிட்டுத் தமிழ்ப் பண்பினையே பாங்குறப் பாடுகின்றார். இவ்வாறே பிறபகுதிகளிலும் தமது பகுத்தறிவுக் கொள்கைக்கேற்ப மனங்கவரும் முறையில் பாடியிருப்பது பாராட்டற்பாலது. போர் பாடியது என்னும் பகுதியில் கட்சி வேறுபாடின்றிப் பல அரசியல் தலைவர்களைப் பற்றியும் பாடியுள்ளமை போற்றத்தக்கது.

இவர்தம் பாடல்கள் ஆற்றொழுக்கான நடையில் எளிய முறையில் இனிமை ததும்ப அமைந்திருக்கின்றன. ஆகவே பலரும் இதனைப் படித்துச் சிந்தனையில் நிறுத்தித் தெளிவு பெறவேண்டும் என்பதே எம்விருப்பம். — பொறுப்பாசிரியர்

உயர்திரு நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோ. பாரதியார் அவர்கள் இல்லத்திலிருந்த நூல்களை அவர்தம் குடும்பத்தினர் நம் சங்கத்திற்கு நன்கொடை தந்துள்ளனர்.

அந்நூல்களின் பட்டியல் பின் வருமாறு:-

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

197 சிவமத விளக்கம்
198 செந்தமிழாற்றுப்படை
199 சொக்கநாதர் வருக்கக் கோவை
200 திருக்குறட் குறிப்பு
201 முதற் குறள் விருத்தி
202 திருமுறைத் திரட்டு
203 ஸ்ரீ ரங்கமகத்துவம்
204 தொண்டைமண்டல சதகம்
205 காந்தி பதிவெண்பா
206 மொழியரசி
207 திருவிளையாடற் புராண வசனம்
208 பராத்பர விளக்கம்
209 இராமலிங்க விஜயம்
210 கடவுள் மாலை
211 பிள்ளை உறங்கா வில்லியார் சரிதம்
212 திருப்பரங்கிரி மும்மணிக் கோவை
213 சீருப்புராணத் திருப்புகழ்
214 காரைக்காலம் மையார் திருமுறை
215 பதினோராந்திருமுறை
216 திருநாவுக்கரசர் தேவாரம்
217 திருமந்திரம்
218 பிரயோக விவேக உரை
219 அருணசல மான்மியம்
220 தேம்பாவணி2-ம்காண்டம்
221 ஷை 1-ம் "
222 மீனுட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம் 1-ம் பாகம்
223 " 2-ம் "
224 விநோத ரசமஞ்சரி
225 நரவாகன தத்த சரிதம்
226 ஈசுவர வழிபாடும் பஞ்சாக் கரவிளக்கமும்
227 செப்பரைக் கனகசபை நாதன் உலா
228 பெரியபுராண வசனம்
229 சுந்தரமூர்த்தி நாயனுர் வசனம்
230 சித்தர் - பெரிய ஞானக் கோவை
231 புறத் திரட்டு
232 வீரகேசரி
233 செய்யுள் வசனசிந்தாமணி
234 சிவஞானயோகி வரலாறு
235 ஒருதுறைக் கோவையும் பூதரவிலாசமும்
236 பாதுகா பாட்டபிசேகம்
237 கீதாஞ்சலி
238 அண்டகோள மெய்ப் பொருள்
239 அநுபவ ஆனந்த தீபிகை
240 மயூரகிரி உலா
241 பாராயண சிந்தாமணி
242 ரகுவம்சம்
243 சரமகவிகள்
244 விக்கிரம சோழனுலா
245 குருபரம்பரை 2-ம்காண் டம்
246 சத்திநிபாதக் கோவை
247 நித்தியாநு சந்தானம்
248 புலியூர்ப் புராணம்
249 திருக்குற்ருலத் தலபுரா ணம்
250 சித்தக்கடல்
251 அம்பிகாபதிக்கோவை
252 கதிரைமலைப் பள்ளு
253 அஞ்ஞானத்தின் வழக்கீடு

254 பிரபுலிங்க லீலை
255 திருப்பரங்கிரிப் புராணம்
256 இறைவனுடைய எழுவகைத் தாண்டவம்
257 தருக்கசங்கிரகம்
258 பொன்வண்ணத்தந்தாதி
259 மூலிகை ஜாலரத்தினம் 2-ம் பாகம்
260 திருக்காவலூர் கோவில்
261 திவ்யசூரி சரிதம்
262 சடகோப திவ்யசரிதம்
263 வரமங்கைக் கலம்பகம்
267 திருக்குற்றாலக்குறவஞ்சி
268 கரவை வேலன் கோவை
269 சிங்கைப்பிரபந்தத்திரட்டு
270 சுத்தபோசன பாகசாத்திரம்
271 தணிகைப் புராணம்
272 ஸ்ரீ ராமாயண பாலகாண்டம்
273 பெண்ணின் பெருமை
274 மாணவர் தமிழிலக்கியத் திரட்டு
274 அறிவுச்சுடர்
276 கஞ்சமலைச் சித்தர்
277 பாலைக்கலி
278 சங்ககாலத் தமிழ் மக்கள்
279 தமிழ்ப் புலவர்கள் வரலாறு
280 யவனர் மஞ்சரி
281 ஆரைவாய் மொழிவரலாறு
282 வீரசிம்மன்
283 உலகவரலாறு 1ஆம்பாகம்
384 ஆராய்ச்சிக் கட்டுரை
284 மேல்காற்று
285 முருகன் அல்லது அழகு
286 புலவர் பெருமை
287 சுதந்திர கீதம்
288 சிலப்பதிகாரக் கட்டுரை
289 அகத்தியர் யார்?
290 கட்டுரை விருந்து
291 இராசா தோடர்மால்
292 மகானுபாவர் மன்றோ
293 பருளை விநாயகர் பள்ளு
294 திருப்பணிகள் மாலை

595 இந்தியாவின் கிராமப் பொருள் நிலை
296 சேரநாடும் செந்தமிழும்
297 திராவிட மொழிகளில் ஆராய்ச்சி
298 சுவர்க்க நீக்கம் முதற் காண்டம்
299 முதற்குலோத்துங்க சோழன்
300 சேரன் செங்குட்டுவன்
301 தமிழ் மொழியின் கடவுட் டன்மை
302 மாணவர் தமிழ் இலக்கியத் திரட்டு முதற்புத்தகம்
303 தமிழ் மொழி நூல்
304 காவிரிக் காவலர்
305 யாழ்ப்பாணச் சரித்திரம்
306 சேரர் பேரூர்
307 வேதியர் ஒழுக்கம்
308 மணிமலர்த் திரட்டு
309 பாரதசக்தி
310 நாடகவியல்
311 சிவஞான சித்தியார் சுபக்கம்
312 திருவாசகம்
313 சிவஞானசித்தியார் சுபக்கம் சூ-2
314 ரகுவம்ச சரிதாமிர்தம்
315 மண்ணியல் சிறுதேர்
316 திருக்குறட் குமரேச வெண்பா-அறத்துப்பால்
317 ஸ்ரீ ரமண சந்நிதி முறை
318 திருக்குறட் குமரேச வெண்பா-காமத்துப்பால்
319 தமிழ்விடு தூது
320 புகழேந்தி
321 யவன மஞ்சரி
322 புவியெழுபது
323 திருவிருத்தம்
324 ஆழ்வார் வைபவங்கள்
325 திருவருட் பிரகாசவள்ளலார் சரித்திரம்
326 பகவத்கீதை
327 சொக்கநாதர் வருக்கக் கோவை

(தொடரும்)

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கல்லைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	6	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	8	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	8	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
49.	கூடற்புராணம்	—	0	10	0
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
53.	பாப்பாவினம்	—	0	10	0
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
58.	கலைசைக்கோவை	—	0	12	0
59	பெருந்தொகை	—	5	0	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
61.	சிராமலைக்கோவை	—	0	12	0
62.	மத்யவியாயோகம்	—	0	2	0
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
66	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா-மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 8 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.